**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி –2020**

**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. ஜேம்ஸ் கூப்பர் லாரன்ஸ் என்பவர் சிறுகதை பற்றிக் கூறிய கருத்து யாது?
2. புதுமைப்பித்தன் கையாண்ட வட்டார வழக்கு எது?
3. நடை குறித்து பிளாபர் என்பவர் கூறுவது என்ன ?
4. உணர்ச்சியும் சொல் வேகமும் நிறைந்த சிறுகதை நடை யாருடையது ?
5. ஸ்டீவன்சன் சிறுகதைகளை எவ்வாறு பிரிக்கிறார்?
6. பாரதி எழுதிய சிறுகதைகள் இரண்டினைக் குறிப்பிடுக ?
7. கப்சிப் தர்பார் என்ற பெயரில் யாருடைய வாழ்க்கை வரலாற்றைப் புதுமைப்பித்தன் எழுதினார்?
8. விஜி என்ற பெயரில் எழுத்துலக வாழ்க்கையைத் தொடங்கியவர் யார்?
9. இராஜம் கிருஷ்ணனின் முதல் நாவல் எது? எப்போது அது வெளியானது?
10. கு.அழகிரிசாமியின் நடைப்பாங்கு எத்தகையது?
11. ஜெயகாந்தன் சமீபத்தில் பெற்ற மிகப் பெரிய விருதினைச் சுட்டுக
12. பெண்ணுரிமை குறித்து எழுதிய அண்ணாவின் சிறுகதை எது?
13. புராணக் கதைகளுக்குப் புதுப்பொருள் தரும் அம்பையின் சிறுகதை எது?
14. தமிழில் முதல் புதினம் எழுதியவர் யார்?

15. வட்டார வழக்கு நாவல் என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் குறிப்பிடுக..
2. சிறுகதையின் தலைப்பு பற்றியும் வகைகளையும் எழுதுக.
3. விந்தனின் நடை நலம் குறித்து எழுதுக
4. ஜெயகாந்தன் கதைகளின் தனிப் பண்புகள் யாவை ?
5. அம்பையின் சிறுகதைகள் உணர்த்தும் பெண்ணின் சாதனைகள் பற்றி எழுதுக.
6. நனவோடை உத்தியினை விவரி
7. துப்பறியும் புதினங்கள் பற்றி எழுதுக
8. அறிவியல் புதினங்களை அறிமுகப்படுத்துக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் குறிப்பிடுக.

அல்லது

(ஆ) கு. அழகிரி சாமியின் சிறுகதைகள் பற்றிக் கட்டுரை வரைக.

2. (அ) பிரபஞ்சனின் சிறுகதைக் களம் குறித்து விளக்குக.

அல்லது

(ஆ) வரலாற்றுப் புதின ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிட்டு விவரிக்க.

3. (அ) சமூகப் புதினங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

அல்லது

(ஆ) புதினங்களில் பயன்படும் உத்திகள் குறித்துக் கட்டுரைக்க.

✻✻✻